தொலைபேசிஎண்: 0431 - 2318622 மின்னஞ்சல்: kattidamtry@gmail.com

**தலைமைப் பொறியாளர் (கட்டடம்) பொ.ப.து., திருச்சி மண்டலம், திருச்சி அவர்களின் செயல்முறை ஆணை.**

**பிறப்பிப்பவர் : திரு.லோ.ரவிச்சந்திரன், பி.இ.,**
தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொபது.,

---------------

**செயல்முறை ஆணை எண். எஸ்1(2) / 5055 / 2020-4 / நாள் : 09.03.2021.**

**பொருள்:** பணியமைப்பு - பொதுப்பணித்துறை - தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 2018-2019 முதல் 2019-2020ம் ஆண்டு போட்டித் தேர்வின் மூலம் - திருமதி.சே.மோனிக்கா, இளநிலை உதவியாளராக தெரிவு செய்யப்பட்டு பணி ஏற்றது - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தியும் - தகுதிகாண் பருவம் துவக்கி வைத்தும் ஆணை வழங்குதல்.

**பார்வை:**
1) செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் சென்னை அவர்களது கடித எண்: 2496 / PSD-I / 2020 / நாள்: 29.05.2020.
2) முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொ.ப.து., சென்னை அவர்களது செயல்முறை ஆணை எண்: எஸ்3(3) / 35935 / 2020 / நாள்: 17.09.2020.
3) இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்: எஸ்.1(2) / 5055 / 2020 -4 / நாள் : 21.09.2020.

******

பார்வை (1)-ல் காணும் சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், செயலாளர் அவர்களின் கடிதத்தில் 2018-2019 முதல் 2019-2020ம் ஆண்டுகளுக்கான தொகுதி-IV-க்கான போட்டித் தேர்வு மூலம் தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதியின் கீழ் இளநிலை உதவியாளராக தெரிவு செய்யப்பட்ட திருமதி.சே.மோனிக்கா (பிறந்த தேதி : 08.07.1992) பார்வை (2) மற்றும் (3)-ல் காணும் செயல்முறை ஆணைகளின்படி இம்மண்டல அலுவலகத்திற்கு மறுபணியமர்வு செய்யப்பட்டதனை தொடர்ந்து, அப்பதவியில் 23.09.2020 முற்பகல் முதல் பணி ஏற்று தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள் சட்டம்) 2016-ல் தமிழ்நாடு சட்டம் 14 / 2016 பிரிவு 28 (1)-ன்படி இளநிலை உதவியாளராக பணியேற்ற 23.09.2020 முற்பகல் முதல் அப்பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

தனியரது பணி, இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட 23.09.2020 முற்பகல் முதல் தொடர் மூன்றாண்டுகளுக்கு உட்பட்ட இரண்டு ஆண்டு தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர், அடிப்படைப் பயிற்சியில் கலந்து கொண்டு அனைத்து தேர்வுகளிலும் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனையுடன் தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணை வழங்கப்படுகிறது.

தனியர் தொடர் மூன்றாண்டுக்கு உட்பட்ட இரண்டு ஆண்டு தகுதிகாண் பருவ காலத்தில் தற்செயல் விடுப்பு தவிர பிற விடுப்புகள் ஏதும் துய்க்க நேரிட்டால் தகுதிகாண் பருவ காலம் நீட்டிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், திருமதி.சே.மோனிக்கா, இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தும் இவ்வாணை சென்னை, உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை ஆகியவற்றில் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகளுக்கான தேர்வுகள் தொகுதி-IV தொடர்பாக தொடரப்பட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்கு உட்பட்டது என்ற நிபந்தனையுடன் வழங்கப்படுகிறது.

ஒ. பாலசு 10/03/2024

**தலைமைப் பொறியாளர் (கட்டடம்), சார்பில்,பொ.ப.து.,**
**திருச்சி மண்டலம், திருச்சி-20.**

10/03/2024

**பெறுநர்:**

**திருமதி.சே.மோனிக்கா,**
இளநிலை உதவியாளர், பொ.ப.து.,
தலைமைப் பொறியாளர் (கட்டடம்), அலுவலகம்,
திருச்சி மண்டலம், திருச்சி-20.